





admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 358 | 4 Pages | 24.7.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 358 | 4 பக்கங்கள் | 24.7.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்**

**பற்றி விடாஅ தவர்க்கு**

**விளக்கம்:**

**யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும்பற்றிக்கொண்டுவிடாத வரை, துன்பங்களும் விடாமல் பற்றிக்கொள்கின்றன.**

## மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆயத்த பணிகள் தொடங்கி விட்டன மத்திய அரசு தகவல்



புதுடெல்லி, ஜூலை 24

தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு, 2027 மார்ச் 1ம் தேதி துவங்கும் என்று மத்திய அரசு அறிவித்திருந்தது. 'நேஷனல் சென்சஸ்' எனப்படும்தேசியமக்கள்தொகைகணக்கெடுப்பு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுவது வழக்கம். கடைசியாக, 2011ம் ஆண்டு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்நிலையில் நாடாளுமன்ற மக்களவையில் 2027ம் ஆண்டுக்கான மக்கள்தொகை கணக்கெடுப்பு பணிகள் பற்றி எம்.பி.க்கள் சிலர் கேள்வி கேட்டு இருந்தனர். அதற்கு மத்திய உள்துறை இணை மந்திரி நித்யானந்த ராய் நேற்று எழுத்துப்பூர்வமாக பதில் அளித்து இருந்தார்.

அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தை வெளிப்படுத்தும் ஜூன் 16ந் தேதியிட்ட அரசிதழ் வெளியீடு மூலம் 2027ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான ஆயத்த பணிகள் தொடங்கி விட்டன. இது தொடர்பாக, கடந்த 3 மற்றும் 4ந் தேதிகளில் டெல்லியில் 2 நாள் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் இயக்குனர்கள், மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குனரகங்களின் மூத்த அதிகாரிகள் மற்றும் இந்திய பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் அலுவலகத்தின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## ஜார்கண்ட் ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக, நீதிபதி தர்லோக் சிங் சவுகான் பொறுப்பேற்றார்



ராஞ்சி, ஜூலை 24

ஜார்கண்ட் ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக, நீதிபதி தர்லோக் சிங் சவுகான் இன்று பொறுப்பேற்று கொண்டார். கவர்னர் சந்தோஷ் குமார் கங்வார் தலைமையில் ராஜ் பவனில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

இமாசல பிரதேச ஐகோர்ட்டின் 2வது மூத்த நீதிபதியாக பதவி வகித்து வந்த அவரை, ஜார்கண்ட் ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக்குவதற்கு, கடந்த மே 26ந்தேதி சுப்ரீம் கோர்ட்டின் கொலீஜியம் பரிந்துரை செய்திருந்தது. இதன்படி, அவர் நீதிபதியாக பதவி ஏற்று கொண்டுள்ளார்.

அவர், பஞ்சாப் பல்கலைக்கழகத்தின் சண்டிகாரில் சட்ட படிப்புகளை படித்து முடித்திருக்கிறார். 2014ம் ஆண்டில் இமாசல பிரதேச ஐகோர்ட்டின் கூடுதல் நீதிபதியாக அவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. அதன்பின்னர் இமாசல பிரதேச ஐகோர்ட்டின் நிரந்தர நீதிபதியானார்.

## "சிவாஜியின் வீரம் பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும்" பவன் கல்யாண்



விஜயவாடா, ஜூலை 24


அக்பர் மற்றும் பாபருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் சத்ரபதி சிவாஜிக்கு வழங்கப்படுவதில்லை என ஆந்திர துணை முதல் மந்திரி பவன் கல்யாண் மறைமுகமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

விஜயவாடாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "அக்பர் குறித்து உயர்வாக பேசுகிறோம். பாபர் போல் அதிரடியான ஆக்கிரமிப்பாளரை மகிமைப்படுத்துகிறோம்.

ஆனால் விஜயநகரப் பேரரசு பற்றி ஏன் எதுவும் சொல்லப்படவில்லை? சத்ரபதி சிவாஜி, தமிழ்நாட்டில் கோவில்களை காப்பாற்றிய வரலாறு ஏன் பாடப்புத்தகங்களில் இடம்பெறவில்லை?" எனக் கேள்வியெழுப்பினார்.

இந்திய வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற மற்ற அரசர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை எனக் கூறிய அவர், இந்தியர் அனைவருக்கும் இந்த உண்மைகளை அறிய வேண்டிய அவசியமுள்ளதாக கூறியுள்ளார்.

## இங்கிலாந்துக்கு பிரதமர் மோடி பயணம்; சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இறுதியாக வாய்ப்பு?



புதுடெல்லி, ஜூலை 24

பிரதமர்மோடி இங்கிலாந்து, மாலத்தீவு ஆகிய நாடுகளுக்கு இன்று முதல் 4 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இதில், பல்வேறு புதிய ஒப்பந்தங்கள் இறுதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர் முதலில் இங்கிலாந்துநாட்டுக்குஇன்றுபுறப்பட்டு செல்கிறார்.

அவருடைய முதல் 2 நாள் பயணத்தின் ஒரு பகுதியாக, இங்கிலாந்து பிரதமர் கீர் ஸ்டார்மரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். மன்னர் 3ம் சார்லசையும் சந்திக்கிறார். லண்டன் நகரருகே உள்ள பிரதமர் ஸ்டார்மரின் வீட்டில் பிரதமர் மோடிக்கு விருந்து அளிக்கப்படும்.

பிரதமர் மோடியின் இந்த பயணத்தில் இரு நாடுகள் இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் முறைப்படி இறுதி செய்யப்படும். இதுதவிர, பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றிலும் இந்தியாவுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் 6வது மிக பெரிய முதலீட்டுக்கான நாடாக இங்கிலாந்து உள்ளது. இதுவரை 3,600 கோடி அமெரிக்க டாலர் முதலீடு செய்யப்பட்டு உள்ளது. இதேபோன்று இங்கிலாந்தில், 2 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு இந்தியா முதலீடு செய்துள்ளது.

இங்கிலாந்து பயணம் முடிந்ததும், 25 மற்றும் 26 ஆகிய நாட்களில் தீவு நாடானமாலத்தீவுக்குபிரதமர்மோடி பயணம் மேற்கொள்கிறார். மாலத்தீவின் சுதந்திர தின கொண்டாட்டங்களில் கலந்து கொள்கிறார். ஜனாதிபதி முகமது முய்ஜுவை சந்தித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். எண்ணற்ற, இந்திய ஆதரவு வளர்ச்சி திட்ட பணிகளையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

# தேசிய சராசரியை விஞ்சினோம்! அதிமுக ஆட்சியின் வளர்ச்சியைக் காட்டிலும் இருமடங்கு மிஞ்சினோம் : முதல் அமைச்சர் பெருமிதம்

டெல்லி , ஜூலை 24

மக்களவையில் நாட்டின் தனிநபர் வருமானம் குறித்து பீகார் எம்பிக்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சவுத்ரி எழுத்துப்பூர்வ அளித்த பதிலில், நாட்டில் தனிநபர் வருமானம் அதிகம் உள்ள மாநிலமாக கர்நாடகா திகழ்வதாகவும் அங்கு 20242025ம் ஆண்டு தனிநபர் வருமானம் ரூ.2,04,605 ஆக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். 2ம் இடத்தில் தமிழ்நாடு இருப்பதாகவும் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ரூ.1,96,309 என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனை மேற்கோள்காட்டி தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள பதிவில், “முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், தொழில்துறை, கல்வி, உட்கட்டமைப்பு மற்றும் சமூக நலனில் மாபெரும் சாதனைகளைப் படைத்து நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது, தமிழ்நாடு. அந்தச் சாதனை பட்டியலில் மற்றுமொன்றாக, தமிழ்நாடு ரூ.1,96,309 என்ற தனிநபர் வருமான குறியீட்டின் மூலம் மாநிலங்களுக்கிடையே இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. இந்தச் சாதனையானது, திராவிடமாடலின்தொலைநோக்கு திட்டங்கள், தொழில் வளர்ச்சி, முதலீடுகளை ஈர்க்கும் முயற்சிகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களின் வெற்றியைப் பிரதிபலிக்கிறது. “எல்லார்க்கும் எல்லாம்” என்ற உன்னத கொள்கையோடு செயல்பட்டு வரும் நமது திராவிட மாடல் ஆட்சிக்குக் கிடைத்த அடுத்த மணிமகுடம் தான் இது.




கடந்த ஆட்சியின் இறுதியாண்டான 202021ல் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 1.43 இலட்சம் ரூபாய் மட்டுமே. நம் கழக ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளில் சராசரியாக 8.15 சதவீதம் வளர்ச்சியோடு 202425 ஆம் ஆண்டில் தனிநபர்வருமானம் 1.96 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது. இதுவே கடந்த ஆட்சிக் காலத்தில், 201617 ஆம் ஆண்டு முதல் 202021 ஆம் ஆண்டு வரை 4.42 சதவீதம் மட்டுமே வளர்ச்சியடைந்துள்ளது. இத்தகைய உயரிய சராசரி வளர்ச்சியானது, வெற்றிகரமான திராவிட மாடல் ஆட்சிக்கு ஒரு சான்றாகும்.

தேசிய சராசரியுடன் ஒப்பிடுகையில் 202425 ஆம் ஆண்டில் தேசிய சராசரி தனிநபர் வருமானம் 1.14 இலட்சம் மட்டுமே. 201415 முதல் 202425 வரையிலான கடந்த பத்தாண்டு தேசிய சராசரி வளர்ச்சி விகிதம் 57 சதவீதம் மட்டுமே. ஆனால், அனைவரையும் வியக்க வைக்கும் வகையில், தமிழ்நாடு அடைந்துள்ள வளர்ச்சி விகிதமோ 83.3 சதவீதம் ஆகும். மக்கள் நலனை மையப்படுத்தி, பொருளாதார முன்னேற்றத்தில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் அரசு கவனம் செலுத்தியதால் இவை சாத்தியமானது. இதே உற்சாகத்தோடு 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை நோக்கி அண்ணன் தளபதி அவர்களின் தலைமையில் இன்னும் வேகமாகப் பயணிப்போம்! “இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தங்கம் தென்னரசுவின் பதிவை மேற்கோள்காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில், “தேசிய சராசரியை விஞ்சினோம்! கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் வளர்ச்சியைக் காட்டிலும் இருமடங்கு மிஞ்சினோம்! அடுத்து வரவுள்ள திராவிடன் மாடல் 2ல் முதல் மாநிலமாக உயருவோம்!”

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனிஷ்க்கின் புதிய நகைத் தொகுப்பு 'அகல்யம்' உடன் ஆடி பெருக்கை கொண்டாடுங்கள்!

தனிஷ்க்கின் 'புதுமை பெண்' பெரும் பாரம்பரியத்தையும் ஆத்மார்த்தமான உணர்வையும் கொண்டாடும் வகையில் கௌரவிக்கிறது.

டாடா குழுமத்தைச் சேர்ந்த இந்தியாவின் மிகப்பெரிய நகை சில்லறை விற்பனை பிராண்டான தனிஷ்க், அமைதி, செழிப்பு மற்றும் புனிதமான தொடக்கங்களுடன் ஆரம்பிக்கும் ஆடி பெருக்குப் பருவத்தைக் கொண்டாடும் வகையில் ‘அகல்யம்’ என்ற புதிய ஆபரணத் தொகுப்பை அறிமுகம் செய்துள்ளது. ‘ஒளியையும், பெரும் ஆற்றலையும் தரும் ‘விளக்கு’ மீது கொண்டிருக்கும் அற்புதமான உணர்வினால் ஈர்க்கப்பட்டு ’அகல்யம்’ நகைத்தொகுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ் பாரம்பரியத்தில் பல தலைமுறைகளாக புனிதமான ஒன்றாக வேரூன்றியிருக்கும் 'தீபம்', ஒளி, ஞானம் மற்றும் தெய்வீகம் ஆகியவற்றைக் குறிக்கும் அடையாளமாக இருந்து வருகிறது. இந்தத் தொகுப்பு இந்தப் புனிதமானவற்றையும், அவை வெளிப்படுத்தும் உணர்வுகளையும் கௌரவிக்கும் வகையில் ‘அகல்யம்’ அறிமுகமாகியுள்ளது. இன்றைய ‘புதுமைப்பெண்’ணுக்காகவே பிரத்தியேக சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்த நகைத்தொகுப்பு, பாரம்பரியத்தில் அவளுக்கென இருக்கும் பெருமையையும், வாழ்வின் முன்னேற்றத்தில் அவள் காட்டும் உத்வேகத்தையும் பிரதிபலிக்கிறது. மரபுகளில் அவள் வேரூன்றியிருந்தாலும் மாறி வரும் நவீன உலகில், அவளின் வசீகரத்தையும், தைரியத்தையும் இந்த பிரச்சாரம் வெளிப்படுத்துகிறது. தமிழ்நாட்டில், மரபுகள் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் அவளது குணமும், மாற்றங்களை முன்னெடுக்கும் அவளது ஆளுமையையும் இந்த நகைத்தொகுப்பில் உள்ள ஒவ்வொரு ஆபரணமும் வெளிப்படுத்துகின்றன.





அகல்யம் நகைத்தொகுப்பின் அறிமுக விழாவில் பேசிய திரு. அருண் நாராயண், சந்தைப்படுத்தல் மற்றும் சில்லறை விற்பனை பிரிவு துணைத் தலைவர், தனிஷ்க், டைட்டன் கம்பெனி லிமிடெட், “தனிஷ்கின் பயணத்தில் தமிழ்நாடு மிகவும் சிறப்பான ஒரு இடத்தைப் பிடித்துள்ளது; தமிழ்நாடு எங்களுக்கு ஒரு முக்கியமான சந்தை மட்டுமல்ல, ஒசூரில் உள்ள எங்கள் முதல் உற்பத்தி மையம் மற்றும் கதீட்ரல் சாலையில் உள்ள எங்கள் முதல் விற்பனை நிலையத்தின் தாயகமாகும். இந்த ஆண்டு ''ஆடி கலெக்ஷன், நம்முடைய பாரம்பரியத்தில் மிகவும் ஆழமாக வேரூன்றியிருக்கும் நம்முடைய பந்தத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கும் தொகுப்பாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒளி, தெய்வீகம் மற்றும் புதிய தொடக்கங்களைக் குறிக்கும் பாரம்பரிய தமிழ் விளக்குகளிலிருந்து நாங்கள் உத்வேகம் பெற்று ‘அகல்யம்’ நகைத் தொகுப்பை வடிவமைத்துள்ளோம். தமிழ்நாட்டின் ஒவ்வொரு புதுமைப் பெண்ணுக்கும் மரியாதை செலுத்துவதற்கான எங்களது வாய்ப்பாக இது அமைந்திருக்கிறது. தலைமுறை தலைமுறையாக மாற்றத்தை கருணையுடன் ஏற்றுக்கொண்டு வளமான மரபுகளை முன்னெடுத்துச் செல்லும் பெண்களுக்கு இந்த நகைத்தொகுப்பை சமர்ப்பிக்கிறோம்.. அவர்கள் இந்த நிலத்தின் உண்மையான அடையாளம். இந்தத் தொகுப்பின் மூலம், அவர்களின் வலிமை, நேர்த்தி மற்றும் கலாச்சார பெருமையை எங்களுடன் சேர்ந்து நீங்களும் கொண்டாட அழைக்கிறோம்.” என்றார்.

## காவலர் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில் மனுக்களை பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு காவல் ஆணையாளர் உத்தரவு

சென்னை பெருநகர காவல்துறையினரின் பணி சிறக்க அவர்தம் குறைகளை போக்கி, காவலர் குடும்ப நலனுக்கு அதிகாரிகள் உதவிடும் வகையில், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ. அருண், உத்தரவின்பேரில் 22.07.2025 அன்று காவலர் குறை தீர் சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளதாக சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. அதன்பேரில், இன்று (22.07.2025) வேப்பேரி, காவல் ஆணையாளர் அலுவலக கலந்தாய்வு கூடத்தில் நடைபெற்ற



‘‘காவலர்கள் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில்‘‘ சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ. அருண், சென்னை பெருநகர காவல், சட்டம், ஒழுங்கு, குற்றப் பிரிவு, போக்குவரத்து காவல் நிலையங்கள், ஆயுதப்படை மற்றும் சிறப்பு பிரிவுகளில் பணிபுரியும் 3 உதவி ஆணையாளர்கள், 5 காவல் ஆய்வாளர்கள், 8 உதவி ஆய்வாளர்கள், அமைச்சுப்பணியாளர் 1 மற்றும் 57 காவல் ஆளிநர்கள் என மொத்தம் 74 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்றார். இம்முகாமில் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் பணிமாறுதல், தண்டனை களைதல், காவலர் குடியிருப்பு கோருதல், ஊதியம் குறைபாடு களைதல் உள்ளிட்ட மனுக்களை பெற்று, இம்மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



# கல்லாறு பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட மங்குஸ்தான் பழங்கள்



ஊட்டி, ஜூலை 24

கல்லாறு தோட்டக்கலைத்துறை பண்ணையில் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மங்குஸ்தான் பழங்கள் கிலோ ஒன்று ரூ.300க்கு சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை கட்டுப்பாட்டில் ஏராளமான பூங்காக்கள் மற்றும் பண்ணைகள் உள்ளன. இந்தப் பண்ணைகளில் பல்வேறு வகையான காய்கறிகள், பழங்கள் மற்றும் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இவைகள் உற்பத்தி செய்த பின் பொதுமக்களுக்கும் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தோட்டக்கலைத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பெரும்பாலான பண்ணைகளில் தற்போது இயற்கை முறையில் பழங்கள் மற்றும் காய்கறிகள் அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகிறது.

மேட்டுப்பாளையம் அருகே உள்ள கல்லாறு பழப்பண்ணைகளில்பல்வேறு பழ மரங்கள் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, இங்கு மங்குஸ்தான், ரம்புட்டான், துரியன் உட்பட பல்வேறு பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், பல்வேறு வகையான பழ நாற்றுக்குள், வாசனை திரவிய பொருட்களின் நாற்றுகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

அதேபோல் வாசனை திரவிய பொருட்களும் அதிகளவு இங்கு விற்பனை செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் அனைத்து பழங்கள் மற்றும் வாசனை திரவிய பொருட்கள் இயற்கை முறையிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு இயற்கை முறையில் அதிக அளவு மங்குஸ்தான் பழங்கள் உட்பட பல்வேறு பழங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

இவைகள் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது. மருத்துவ குணம் நிறைந்த இந்த பழங்களை பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிக அளவு வாங்கி சாப்பிடுகின்றனர்.

மங்குஸ்தான் பழத்தில் புற்றுநோயை கட்டுப்படுத்தும் சக்தி உள்ளதாக கூறப்படுகிறது. வைட்டமின் பி1, பி2, பி9, வைட்டமின் சி, மெக்னீசியம், காப்பர் மற்றும் நார்சத்துக்கள்நிறைந்து காணப்படுகிறது. இதனால் இந்த படங்களை பெரும்பாலான மக்கள் விரும்பி உண்கின்றனர். இந்நிலையில், கல்லாறு பண்ணையில் இம்முறை அதிகளவு இந்த பழங்கள் காய்த்துள்ளன.

இதனை தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் ஊட்டியில் உள்ள அரசு தாவரவியல் பூங்கா உட்பட பல்வேறு பூங்காக்களில் வைத்து சுற்றுலா பயணிகளுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றனர். சாதாரணமாக, வெளி மார்க்கெட்டில் தற்போது கிலோ ஒன்று ரூ.400 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில், ஊட்டி தாவரவியல் பூங்காவில் தோட்டக்கலைத்துறை சார்பில் கடை அமைக்கப்பட்டு கிலோ ஒன்று ரூ.300க்கு மங்குஸ்தான் பழங்கள் விற்பனை செய்யப்படுகிறது.

பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் இந்த பழங்களை வாங்கி செல்கின்றனர். மேலும், உள்ளூர் மக்கள் பலரும் இந்த பழங்களை வாங்கி செல்கின்றனர்.

# பர்லியார் அரசு தோட்டக்கலை பழப்பண்ணையில் துரியன் பழம் விற்பனை களை கட்டியது



குன்னூர், ஜூலை 24

மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதிகளில் பல்வேறு நோய்களுக்கு மருந்தாக கூடிய பல்வேறு மூலிகை தாவரங்கள் காணப்படுகின்றன. குன்னூர்மேட்டுப்பாளையம் சாலையில் கடல் மட்டத்திலிருந்து 830 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள பர்லியார் அரசு தோட்டக்கலைப்பண்ணையில் குழந்தை பாக்கியத்தை உருவாக்க கூடிய மருத்துவ குணம் கொண்ட துரியன் பழங்கள் தற்போது சீசன் துவங்கி மரங்களில் காய்த்து குலுங்குகிறது.

இந்த பழங்கள் மிதமான காலநிலையில் அரை வெப்பநிலையில் உள்ள இடமான குன்னூர் அரசு பர்லியார் பழப்பண்ணையில் மட்டும் வளரக்கூடிய தன்மை உள்ளது. இந்த பழத்தை உண்பதன் மூலம் ஆண்களுக்கு மலட்டுத்தன்மை நீக்க கூடிய மருத்துவ குணம் கொண்டதாக பர்லியார் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அங்கு 25க்கும் மேற்பட்ட துரியன் மரங்கள் உள்ளன. வருடத்தில் ஜூலை முதல் ஆகஸ்ட் மாதங்கள் வரை இந்த துரியன் பழம் காய்க்க தொடங்கும். இந்த பழம் மரத்திலிருந்துதானாக கீழே விழும்.

அதன் பிறகு தான் விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர். அரசு பண்ணையில் கிலோ ரூ.500க்கு விற்கப்படுகிறது. மேலும் பர்லியார் பகுதியில் உள்ள கடைகளிலும் பண்ணையிலிருந்து வாங்கப்பட்ட பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. தமிழ்நாடு மற்றும் பல்வேறு பகுதியிலிருந்து பொதுமக்கள் வாங்கி செல்கின்றனர். தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் இந்த பழங்களை வாங்க வருவதால் இந்த பழங்களுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது.

# அரசாணைப்படி ஊதியம் கோரி ஊராட்சி பம்ப் ஆபரேட்டர்கள் போராட்டம்




ஊட்டி, ஜூலை 24

குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி தூய்மை பணியாளர்கள், குடிநீர் பம்ப் ஆபரேட்டர்களுக்கு ஊதியம் வழங்க கோரி ஊட்டியில் காத்திருப்பு போராட்டத்தில் ஊராட்சி ஊழியர்கள் ஈடுபட்டனர். குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி, தமிழக அரசால் வெளியிடப்பட்ட அரசாணைப்படி குடிநீர் பம்ப் ஆபரேட்டர், தூய்மை பணியாளர்கள், பைப்பிட்டர், வரி வசூலிப்பாளர்களுக்கு ரூ.15 ஆயிரத்து 550 ஊதியம் வழங்க வேண்டும்.

தமிழ்நாடு அரசிடம் ஏஐடியுசி ஊராட்சி தொழிற்சங்க தலைவர்கள் நடத்திய பேச்சு வார்த்தையின் அடிப்படையில் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளுக்கு அரசாணை உடனடியாக வழங்கிட வேண்டும். 20 ஆண்டுகள் பணி முடித்தவட்டார, மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களையும், பம்ப் ஆபரேட்டர்களையும், பைப்பிட்டர், வரி வசூலிப்பாளர்களையும் பணி நிரந்தரப்படுத்த வேண்டும்.

கொரோனா காலத்தில் பணியாற்றிய குடிநீர் பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர்களுக்கு கொரோனா கால ஊக்கத்தொகை வழங்கப்பட வேண்டும். கணினி இயக்குபவர்களுக்கு வருடாந்திர சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்.

தூய்மை காவலர், பம்ப் ஆபரேட்டர், பைப் பிட்டர், தூய்மை பாரதி ஒருங்கிணைப்பாளர், வரி வசூலிப்பாளர் ஆகிய பணியாளர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும். காலிப்பணியிடங்களை நிரப்பும் போது, தற்காலிக குடிநீர் பம்ப் ஆபரேட்டர்களை அந்த பணியிடங்களில் நிரப்ப வேண்டும்.

தமிழ்நாடு அரசாணைப்படி 7வது ஊதிய நிலுவை தொகையை உடனடியாக வழங்கிட வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஊழியர்கள் நேற்று ஊட்டியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஊராட்சி பணியாளர் சம்மேளனம் மாவட்ட செயலாளர் தொரை தலைமை வகித்தார். பொருளாளர் ரவி, மாவட்ட குழு உறுப்பினர் ராஜூ, கே. தொரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ மாவட்ட செயலாளர் போஜ்ராஜ், ஏஐடியுசி கவுன்சில் பொதுச்செயலாளர் மூர்த்தி, நீலகிரி மாவட்ட சங்க பொதுச்செயலாளர் ரகுநாதன், சுந்தர்ராஜ், ரமேஷ், சந்திரசேகர், குண்டன் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

# மதுரை ஆதினத்தின் முன் ஜாமினை ரத்து செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் காவல்துறை மனு தாக்கல்



சென்னை, ஜூலை 24

மதுரை ஆதீனத்தின் முன்ஜாமினை ரத்து செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் காவல்துறை தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அண்மையில் மதுரை ஆதீனத்தின் கார் மீது மற்றொரு கார்மோதி இடித்து சென்ற சம்பவம் பரபரப்புக்குள்ளானது. இது குறித்து அவர் பேசியபோது தன்னை கொலை செய்ய சதி நடந்துள்ளது என்றும் இதற்கு பாகிஸ்தானுக்கு தொடர்பு இருக்கலாம் என்றும் தன கார் மீது மோதியவர்குல்லாஅணிந்திருந்தார்கள் தாடி வைத்திருந்தார்கள் என்று கூறியிருந்தார்.

இது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவியது. இந்த நிலையில் இவரது பேச்சு இருமதத்தினரிடையே குழப்பத்தையும், மோதலையும் உருவாக்கும் வகையிலேயே இருப்பதாக கூறி சென்னையை சேர்ந்த வழக்கறிஞர் ராஜேந்திரன் என்பவர் சைபர் கிரைம் போலீசில்புகார்கூறியிருந்தார். அதன் அடிப்படையில் அவர் மீது 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இதற்கு முன் ஜாமீன் கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் அமைந்துள்ள மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அவர் மனுதாக்கல் செய்திருந்தார்.

முன்ஜாமீன் மனுவை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு முன்ஜாமீன் வழங்கியது. அவரது வயதை காரணம் காட்டி அவரிடம் காவல்துறை நேரில் சென்று விசாரிக்கலாம் என்று தெரிவித்திருந்தது. அதனடிப்படையில் கடந்த 20ம் தேதி சம்மந்தப்பட்ட விசாரணை அதிகாரி அவரது மடத்துக்கே சென்று தனது விசாரணையை தொடங்கினார். ஆனால் மதுரை ஆதின மடத்துக்கு சென்ற அவருக்கு எந்த ஒத்துழைப்பும் வழங்கவில்லை என தெரிவித்தார்.

குறிப்பாக ஆதினமோ அல்லது ஆதீனத்தின் ஆதரவாளர்களோ யாரும் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை. இதை அடுத்து அவரது சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஒத்துழைக்காத காரணத்தினால் அவரது முன்ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என்று இன்றைய தினம் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு இன்று நீதிபதி நிர்மல் குமார் முன்பு விசாரணைக்கு வர உள்ளது. அப்போது விசாரணைக்கு ஒத்துழைக்காத காரணத்தினால் அவரை காவல் துறை கஸ்டடியில் எடுத்து விசாரிக்க அவரது முன்ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என்று காவல்துறையில் வாதம் முன்வைக்கப்பட உள்ளது.

# சிவகாசியில் ஆய்வுக்கு அஞ்சி மூடப்பட்ட பட்டாசு ஆலைகள் 9 நாட்களுக்குப் பிறகு திறப்பு



விருதுநகர், ஜூலை 24

சிவகாசியில் ஆய்வுக்கு ஒத்துழைக்காத பட்டாசு ஆலைகளுக்கு சீல் வைக்க பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளதால், 200க்கும் மேற்பட்ட ஆலைகள் 9 நாட்களுக்குப் பிறகு இன்று திறக்கப்பட்டன. ஆய்வு செய்வதற்கு 15 குழுக்கள் அமைக்கப்பட, ஆய்வுக்கு அஞ்சி இந்த ஆலைகளை அதன் நிர்வாகத்தினரே மூடி வைத்திருந்தனர்.

அதிகாரிகள் ஆய்வுக்கு ஒத்துழைக்காத பட்டாசு ஆலைகளை தற்காலிகமாக மூட தென்மண்டல பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான பட்டாசு ஆலைகள் உள்ளன. இந்த ஆலைகளில் ஆயிரக் கணக்கானோர் பட்டாசு தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றன. இதனிடையே, பட்டாசு ஆலைகளில் அடிக்கடி வெடிவிபத்து சம்பவங்கள்நடைபெற்று உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்றன. இதனிடையே 2023ல் விருதுநகர் கங்கர்செவல் கிராமத்தில் பட்டாசு ஆலை விபத்தில் 10 பேர் உயிரிழந்தது தொடர்பாக தாமாக முன்வந்து பசுமை தீர்ப்பாயம் வழக்கை விசாரித்தது.

பட்டாசு ஆலை விபத்துகள் தொடர்ந்து அதிகரித்து வரும்நிலையில், ஆலைகளில் விதிமுறைகள் பின்பற்றப்படுகிறதா? என ஆய்வுசெய்ய தேசிய பசுமைத் தீர்ப்பாயம் அண்மையில் உத்தரவிட்டது. இந்நிலையில் இந்த வழக்கு மீண்டும் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது ஆய்வு செய்ய அதிகாரிகள் செல்லும் போது பட்டாசு ஆலை உரிமையாளர்கள் ஒத்துழைப்பு தருவதில்லை என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. உரிய ஒத்துழைப்பு அளிக்காமல் ஆலைகளை மூடி விட்டு சென்று விடுவதாக அரசு தரப்பு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். அதனை தொடர்ந்து அதிகாரிகள் ஆய்வுக்கு ஒத்துழைக்காத பட்டாசு ஆலைகளை தற்காலிகமாக மூட தென்மண்டல பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. வழக்கில் பட்டாசு ஆலை உரிமையாளர் சங்கம், தொழிலாளர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலரை சேர்க்க உத்தரவிட்டது. விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு ஆலை விபத்துகளில் தொழிலாளர்கள் பலியாவது மிகுந்த வேதனை அளிக்கிறது என்றும் தீர்ப்பாயம் கருத்து தெரிவித்துள்ளது. இந்நிலையில் இன்று 9 நாட்கள் கழித்து பட்டாசு ஆலைகளை உரிமையாளர்கள் திறந்துள்ளனர்.

# நீடாமங்கலம் வேளாண் கோட்டத்தில் 33,000 ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி



நீடாமங்கலம், ஜூலை 24

நீடாமங்கலம் வேளாண் பகுதிகளில் சுமார் 33,000 ஏக்கரில் முன் பட்ட குறுவை சாகுபடியில் விவசாயிகள் நெற்பயிரில் களை எடுக்கும் பணியில் விவசாய பெண் தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றர்.நீடாமங்கலம் வேளாண் கோட்ட பகுதியில் சுமார் 33,000 ஏக்கரில் முன் பட்ட குறுவை சாகுபடியை விவசாயிகள் தொடங்கி செய்து வருகின்றனர். இந்த சாகுபடியில் சிலர் நிலத்தடி நீரில் மின் மோட்டாரை கொண்டு பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டு குறுவை சாகுபடியில் சுமார் சுமார் 33,000 ஏக்கரில் விவசாயிகள் குறுவை சாகுபடியை செய்து முடித்தனர். இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை காலத்தில் தொடங்கிய மழையால் கர்நாடக அணைகள் நிரம்பி வழிவதால் மேட்டூர் அணை முழு கொள்ளவு எட்டியுள்ளது. இதனால் மேட்டூர்அணையில் இருந்து பானத்திற்கு நீர் அதிகமாக திறக்கப்பட்டு கடைமடை வரை பாசன நீர் சரியானபடி வந்தடைந்து விவசாயிகள் குறுவைசாகுபடி பணியை மும்முரமாக தொடங்கியுள்ளனர்.

டெல்டா மாவட்ட பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் நீடாமங்கலம் வேளாண் கோட்ட பகுதிகளில் நீடாமங்கலத்தில் இருந்து கிழக்குப் பகுதியில் பெரும்பாலானோர் சம்பா சாகுபடியை தொடங்க அதற்கான வயல்களை சுத்தம் செய்யும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.நீடாமங்கலம் பகுதியில் குறுவை சாகுபடி, தாளடி சாகுபடி, சம்பா மற்றும் கோடை சாகுபடி என நிலத்தடி நீரை பயன்படுத்தி சிலர்சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்நிலையில் நீடாமங்கலம் வேளாண் கோட்டப் பகுதியில் கோடை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தற்போது இயந்திர அறுவடைபணி முடியும் தருவாயில் உள்ளது. தற்போது முன் பட்ட குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ரிஷியூர், கண்ணம்பாடி, வரதராஜபெருமாள் கட்டளை, கட்டையடி, பெரம்பூர், அனுமந்தபுரம், சித்தமல்லி, ராயபூரம், காளாச்சேரி, மேலபூவனூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கோடை நடவுக்கு முடிந்து அறுவடை நடைபெற்று வருகிறது.

இதனையடுத்து விவசாய தொழிலாளர்கள் முன் பட்ட குறுவை நெல்பயிரில் களை எடுக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். முன்கூட்டியே விவசாயிகள் நடவு செய்த பல இடங்களில் நெல் பயிராகவும், அதற்கான களை எடுப்பு, உரமிடுதல், பூச்சி மருந்து அடிக்கும் பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகிறது.

# கூம்பு வடிவ ஒலிபெருக்கிகளால் மாணவ மாணவியர் பாதிப்பு




நாகர்கோவில், ஜூலை 24

கூம்புவடிவ ஒலி பெருக்கிகளால் மாணவ மாணவியர்கல்வி பாதிக்கப்படுவதாக கலெக்டரிடம் லெனினிஸ்ட் புகார் அளித்துள்ளது. மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் செங்கொடி மாவட்ட செயலாளர் பால்ராஜ், குமரி மாவட்ட கலெக்டரிடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:குமரி மாவட்டத்தில் ஒவ்வொரு காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளிலும் சுமார் 250 வழிபாட்டு தலங்கள் காணப்படுகிறது. இந்த வழிபாட்டு தலங்களில் பெரும்பாலான வழிபாட்டு தலங்கள் மாவட்ட கலெக்டரின் அனுமதியின்றி செயல்படுகிறது.

இந்த வழிபாட்டு தலங்களில் காவல் துறையின் அனுமதியின்றி கூம்பு மற்றும் சக்திவாய்ந்த பாக்ஸ் வடிவ ஒலி பெருக்கிகள் கோபுரங்களிலும், மரத்தின் உச்சியிலும் கட்டப்பட்டுள்ளது. இந்த ஒலி பெருக்கியில் இருந்து வெளிப்படுகின்ற சத்தம் சுமார் 1 கிமீ முதல் 2 கி.மீ தொலைவு வரை கேட்கிறது. பெரும்பாலான வழிபாட்டு தலங்களில் தடை செய்யப்பட்ட நேரத்தில் அதிகாலை 4 மணியில் இருந்து காலை 7 மணி வரையிலும் பாடல்கள் ஒலிபரப்பு செய்யப்படுகிறது. கூடுதலாக ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை அலாரம் மணியும் அடிக்கப்படுகிறது.

இதனால் அந்த பகுதி மக்களின் தூக்கம், ஓய்வு பாதிக்கப்படுகிறது. மாணவ மாணவியர் கல்வி பாதிக்கப்படுகிறது. இது தொடர்பான புகார்கள் காவல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே குமரி மாவட்ட நிர்வாகம் சட்டம் ஒழுங்கை விவாதிக்கின்ற மாவட்ட அளவிலான கூட்டத்தில் இது தொடர்பான அஜெண்டா வைத்து விவாதித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊட்டி தாவரவியல் பூங்காவில் 2ம் சீசனுக்கான நடவுப்பணிகள் துவக்கம்



ஊட்டி, ஜூலை 24

ஊட்டி தாவரவியல் பூங்காவில் இரண்டாம் சீசனுக்கானநடவுபணிகள்நேற்று துவங்கியது. இம்முறை 5 லட்சம் மலர் நாற்றுக்கள் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்திற்கு நாள்தோறும் பல ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். குறிப்பாக, கோடை காலமான ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அதிகளவு சுற்றுலா பயணிகள் வருவார்கள்.

இதனால், இது முதல் சீசனாக உள்ளது. செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளி மாநிலங்களில் இருந்து அதிகமான சுற்றுலா பயணிகள் வருவார்கள். இதனால், இவ்விரண்டு மாதங்கள் இரண்டாம் சீசனாக அனுசரிக்கப்படுகிறது.

முதல் சீசனின் போது, தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. இதனை காண தமிழகம் மற்றும் பிற மாநிலங்களை சேர்ந்த பல லட்சம் சுற்றுலா பயணிகள் இங்கு வருவது வழக்கம். இதேபோல், இரண்டாம் சீசனின் போது மலர் கண்காட்சி நடத்தாத போதிலும், சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் பொருட்டுபூங்காவில் பல லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்படும். இதே போல், பல ஆயிரம் தொட்டிகளிலும் மலர் செடிகள் நடவு செய்யப்படும்.

இந்நிலையில், இரண்டாம் சீசனுக்கான நாற்று நடவு பணிகள் நேற்று துவங்கியது. ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் நடந்த நிகழ்ச்சியில், நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கலந்து கொண்டு மலர் நாற்றுக்கள் நடவு பணிகளை துவக்கி வைத்தார். தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர்சிபிலா மேரி முன்னிலை வகித்தார். இம்முறை 5 லட்சம் மலர் நாற்றுக்கள் நடவு செய்யப்படவுள்ளது. இது குறித்து கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கூறியதாவது:

இரண்டாம் சீசனுக்காக கொல்கத்தா, காஷ்மீர், பஞ்சாப், புனே போன்ற இடங்களிலிருந்து இன்கா மேரி கோல்டு, பிரெஞ்ச் மேரி கோல்டு, ஆஸ்டர், வெர்பினா, ஜூபின், கேணீடிடப்ட், காஸ்மஸ், கூபியா, பாப்பி, ஸ்வீட் வில்லியம், அஜிரேட்டம், கிரைசாந்திமம், கலண்டுலா, ஹெலிக்ரைசகம், சப்னேரியா போன்ற 60 வகைகளில் பல்வேறு வகையான விதைகள் பெறப்பட்டு, இவைகளை கொண்டு சுமார் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வண்ண மலர்ச்செடிகள் இரண்டாவது சீசனுக்காக மலர் பாத்திகளில் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், 15 ஆயிரம் தொட்டிகளில் சால்வியா, டெய்சி, டெல்பினியம், டேலியா, ஆந்தூரியம், கேலா லில்லி போன்ற 30 வகையான மலர்ச்செடிகள் நடவுப் பணியும் துவக்கி வைக்கப்பட்டது.

இம்மலர் தொட்டிகள் மலர் காட்சித்திடலில் அடுக்கி வைக்கப்பட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்களின் கண்களுக்கு விருந்தாக ஒரு மாத காலம் வரை திறந்து வைக்கப்பட உள்ளது. இந்த ஆண்டு இரண்டாம் சீசனுக்காக செப்டம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் மலர் அலங்காரங்கள் துவங்கப்படவுள்ளது.

இதனை காண சுமார் 3 லட்சம் சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார். இந்நிகழ்ச்சியில், உதவி இயக்குனர்கள் நவநீதா, ஜெயலட்சுமி, பைசல், அனிதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தாமிரபரணி ஆற்றின் கரையில் மண் நிரப்பும் பணி நீர்வளத்துறை மதுரை மண்டல தலைமை பொறியாளர் ஆய்வு

நித்திரவிளை, ஜூலை 24

கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட வைக்கல்லூர் கிராமத்தில் தாமிரபரணி ஆற்றின் பரக்காணி தடுப்பணையின் வலது கரையில் 2021ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மண் அரிப்பு ஏற்பட்டது. இதையடுத்து மண் அரித்து சென்ற பகுதியை சீரமைக்க தமிழக அரசு ரூ.2 கோடியே 23 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது.



இந்த பணிக்கு அரசாணை மூலம் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, சிற்றார் அணை 2ல் இருந்து மண் எடுக்கப்பட்டு மண் அரிப்பு ஏற்பட்ட தாமிரபரணி ஆற்றின் கரை பகுதியை நிரப்பும்பணிநடந்துவருகிறது. இந்தப் பணியினை நீர்வளத்துறை மதுரை மண்டல தலைமை பொறியாளர் ரமேஷ் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது கோதையாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் வசந்தி, உதவி செயற்பொறியாளர் மூர்த்தி, உதவி பொறியாளர் இவாஞ்சலின் எஸ். பேரிடா, களப்பணியாளர்கள் வின்ஸ்லால், சிவலிங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.

## ஆடி அமாவாசை.. மலர்கள் தேவை அதிகரிப்பு எதிரொலி: தோவாளை மலர்ச் சந்தையில் பூக்கள் விலை கடும் உயர்வு

கன்னியாகுமரி, ஜூலை 24

ரூ.30க்கு விற்கப்பட்ட கேந்தி மலரின் விலை ரூ.80ஆகவும், அரளியின் விலை ரூ.80லிருந்து, ரூ.180ஆகவும், ரோஜாவின் விலை ரூ.80 லிருந்து, ரூ.150க்கும் தாவி இருக்கிறது. செவ்வந்தி கிலோ ரூ.200க்கும், சம்பங்கி ரூ.220க்கும் விற்பனையாகிறது. தாமரை ஒன்று ரூ.3க்கு விற்பனையான நிலையில், இன்று ரூ.10ஆக அதிகரித்துள்ளது. தாழம்பூ ஒன்றின் இன்றைய விலை ரூ.75க்கு விற்பனையாகிறது.



விலை பன்மடங்கு உயர்ந்தாலும் கேரளா மற்றும் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்து சில்லறை பூ வியாபாரிகளும், பொதுமக்களும் அதிக அளவில் பூக்கள் வாங்கி செல்கிறார்கள். அதிக லாபம் கிடைத்ததால் மலர் சாகுபடி விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

## ஆனந்தம் பாளையம் ஊராட்சி பட்டாசு பாளியில் குடிநீர் தட்டுப்பாடு

மொடக்குறிச்சி, ஜூலை 24

ஆனந்தம் பாளையம் ஊராட்சிக்குட்பட்ட பட்டாசு பாளியில் ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக குடிநீர் இணைப்பு வழங்காததால் அப்பகுதி மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். மொடக்குறிச்சி ஒன்றியத்துக்குட்பட்ட ஆனந்தம் பாளையம் ஊராட்சியில் உள்ள பட்டாசு பாளியில் 150க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இவர்களுக்கு மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் 2022 2023ம் ஆண்டு வீடுகளுக்கு நேரடியாக குடிநீர் வழங்குவதற்காகரூ.12.93 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் பணிக்காக குடிநீர் இணைப்புகள் வீடுகளுக்கு வழங்கப்பட்டது.



இதற்காக அப்பகுதியில் இரண்டு மேல்நிலை குடிநீர் தொட்டிகள் கட்டப்பட்டது. ஆனால், இது வரை குடிநீர் வீடுகளுக்கு வழங்காமல் இருந்து வருகின்றனர். மேலும் காவிரி ஆற்றில்இருந்து,கொண்டு வரப்படும் குடிநீர் பட்டாசு பாளியில் கட்டப்பட்டுள்ள இரண்டு மேல்நிலைப்தொட்டிகளுக்கும் மேலே கொண்டு செல்ல இணைப்பு வழங்கப்படவில்லை.

இதனால், இத்திட்டத்தின் மூலம் வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்பட்டும் இதுவரை ஆற்று நீர் செல்லவில்லை. இதனால், அப்பகுதி மக்கள் குடிநீர் இல்லாமல் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில், ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு நேரடியாக குடிநீர் இணைப்பு வழங்குவதற்காகஊராட்சி நிர்வாகத்தின் சார்பில் கடந்த 2023ம் ஆண்டு குடிநீர்வரியாகரூ.1100ரூபாய் கட்டணமும் பெறப்பட்டு அதற்குண்டான ரசீதும் ஊராட்சி நிர்வாகத்தின் சார்பில் ஒவ்வொரு இணைப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க் மூலம் மட்டுமே 150 குடும்பங்களுக்கும் தண்ணீர் பிடித்து வருகின்றனர். இது குறித்து பல முறை அதிகாரிகளுக்கு புகார் தெரிவித்தும் இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதுகுறித்து அப்பகுதி மக்கள்கூறுகையில், ''நாங்கள் தினசரி காலையில் வேலைக்கு செல்வதால் தண்ணீர் பிடிப்பதில் சிரமம்ஏற்படுகிறது. மேலும், எங்கள் ஊரில் திருமணம் மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடைபெற்றால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே ஜல்ஜீவன் மிஷின் திட்டத்தின் கீழ் குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும்'' என்றனர்.

## ஆடி பண்டிகையை முன்னிட்டு ஜவுளி சந்தையில் விற்பனை விறுவிறுப்பு; வியாபாரிகள் மகிழ்ச்சி

ஈரோடு, ஜூலை 24

ஆடி பண்டிகையை முன்னிட்டு ஈரோடு ஜவுளிச்சந்தையில் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்றது. இதனால், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில் கனி மார்க்கெட் ஜவுளி வணிக வளாகம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான மணிக்கூண்டு ரோடு, டி.வி.எஸ். வீதி, ஈஸ்வரன் கோயில் வீதி, என்.எம்.எஸ்.காம்பவுண்ட், காமராஜர் வீதி, பிருந்தாவீதி உள்ளிட்ட பகுதிகளில் ஜவுளி மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இங்கு வாரந்தோறும் திங்கட்கிழமை இரவு தொடங்கி, செவ்வாய்க்கிழமை இரவு வரை ஜவுளிச் சந்தை நடைபெற்று வருகிறது. இதுதவிர, ஜவுளி குடோன்களிலும் ஜவுளி விற்பனை நடைபெறுவது வழக்கம்.



தென்னிந்திய அளவில் பிரசித்தி பெற்ற ஈரோடு ஜவுளிச் சந்தைக்கு அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய வெளி மாநிலங்களில் இருந்தும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான வியாபாரிகள் வந்து, ஜவுளி கொள்முதல் செய்து செல்வார்கள். இந்த வார ஜவுளிச் சந்தை நேற்று முந்தினம் இரவு தொடங்கி நேற்று இரவு வரை நடைபெற்றது.

இதில், கேரள வியாபாரிகள் அதிக அளவில் வந்திருந்தனர். அதேபோல, தமிழ்நாட்டில் ஆடிப்பண்டிகையை முன்னிட்டு உள்ளூர் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களும் அதிக அளவில் வந்திருந்து சிவப்பு, மஞ்சள் உள்ளிட்ட வண்ண வேட்டி, சேலை, துண்டுகளை அதிக அளவில் கொள்முதல் செய்தனர். இதனால், இந்த வார ஜவுளிச் சந்தையில் விற்பனை அதிகரித்து காணப்பட்டது. ஆடி மாதம் திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள் இல்லாததால் மொத்த வியாபாரம் மிக குறைவாகவே நடைபெற்றது.

அதே நேரம், வட மாநிலங்களில் வினாயகர் சதுர்த்தி, கேரளத்தில் ஓணம் உள்ளிட்ட பண்டிகள் கொண்டாடப்படவுள்ள நிலையில், அதற்கான செட் சேலைகள், வேட்டிகள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள் விற்பனை அதிக அளவில் நடைபெற்றது. இதனடிப்படையில் இந்த வார ஜவுளிச் சந்தையில் சில்லரை விற்பனை சுமார் 40 சதவீதமும் மொத்த விற்பனை சுமார் 30 சதவீதமும் நடைபெற்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## அப்புகொட்டாய் கிராமத்தில் சிதிலமாகி கிடக்கும் பயணிகள் நிழற்கூடம்



போச்சம்பள்ளி, ஜூலை 24

காவேரிப்பட்டணம் ஒன்றியம், பண்ணந்தூர் அப்புகொட்டாய் கிராமத்தில், கடந்த 27 வருடங்களுக்கு முன்பு மக்கள் பயன்பாட்டிற்காக பயணிகள் நிழற்கூடம் கட்டப்பட்டது. அப்புகொட்டாய் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள், இந்த நிழற்கூடத்தை பயன்படுத்தினர்.

தங்கள் கிராமங்களில் இருந்து விவசாய பொருட்களைவிற்கவும், வாங்கவும் மற்றும் வெளியூர் செல்ல வருபவர்களுக்கு நிழற்கூடம் இளைப்பாறும் இடமாக இருந்தது.

இந்நிலையில் போதிய பராமரிப்பு இல்லாததால் நிழற்கூடம் பழுதடைந்தது. இந்நிலையில் நிழற்கூடத்தில் மேற்கூறை, சிமெண்ட் காரை பெயர்ந்து விழுந்தது. அப்போது, நிழற்கூடத்தின் அடியில் யாரும் நிற்காததால் எவ்வித அசம்பாவிதமும் நிகழவில்லை.

எனவே, அதிகாரிகள் நிழற்கூடத்தை நேரில் ஆய்வு செய்து, முற்றிலுமாக இடித்து அகற்றி விட்டு, புதியாக நிழற்கூடம் கட்டி தர வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## Flipkart நிறுவன குடோனில் காலாவதியான பேரிச்சைப் பழங்கள் கண்டுபிடிப்பு

கோவை, ஜூலை 24

கோவை ஒத்தக்கால் மண்டபம் பகுதியில் உள்ள FLIPKART நிறுவனத்தின் குடோனில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 278 கிலோ காலாவ தியான பேரிச்சைப் பழங்களை உணவு பாதுகாப்புத்துறை குப்பையில் கொட்டியது.

அதிகாரிகள் நடத்தி ய சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது.

## கிருஷ்ணகிரி மாவட்ட மத்திய நாற்றங்கால் பண்ணையில் விவசாயிகளுக்கு உயர்ரக மரக்கன்றுகள்



கிருஷ்ணகிரி, ஜூலை 24

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள், போலுப்பள்ளி மத்திய நாற்றங்கால் பண்ணையில் மரக்கன்றுகளை இலவசமாக பெறலாம் என சமூக காடுகள் மற்றும் விரிவாக்கம் மையம், மத்திய நாற்றங்கால் பண்ணை வனச்சரக அலுவலர் செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் வனப்பரப்பை 23.7 சதவீதத்தில் இருந்து, 33 சதவீதமாக உயர்த்தும் நோக்கோடு, தமிழ்நாடு பசுமை இயக்கம் நடைமுறைப்படுத்துவதாக அறிவித்து, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 2022 செப்டம்பர் 24ம்தேதி, செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில் துவக்கி வைத்தார். அதிக அளவிலான நாட்டு மரங்கள் நடுவது மற்றும் ஊக்குவிப்பது பசுமைதமிழ்நாடு இயக்கத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இந்த இயக்கத்தின் கீழ், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் உயர் ரக மரங்களான சந்தனம், செம்மரம் மற்றும் ஈட்டி மரம் போன்ற மரங்களை வளர்க்க விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவார்கள். இயற்கை வளங்களை நிலையான முறையில் பயன்படுத்தி, வனப்பகுதியில் வசிக்கும் பழங்குடியினர், விவசாயிகள், கிராம மக்கள் போன்ற உள்ளூர் சமூகங்களின் வருமானத்தை பெருக்கவும், இந்த திட்டம் உதவும்.

பசுமைதமிழ்நாடு இயக்கத்திற்காக, பல்வேறு மாவட்டங்களில் வனத்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நாற்றங்கால்கள் போன்றவற்றின் மூலமாக 2.80 கோடி மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு உள்ளன.

இந்நிலையில் தற்போது தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்திற்கான பசுமை திட்டத்தின் மூலம், உயர் ரகத்துடன் தரமான மரக்கன்றுகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்க, மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளது.

இதுகுறித்து கிருஷ்ணகிரி வனக்கோட்டம் சூளகிரி சமூக காடுகள் மற்றும் விரிவாக்கம் மையம் மத்திய நாற்றங்கால் பண்ணை வனச்சரக அலுவலர் செந்தில்குமார் கூறியதாவது: கிருஷ்ணகிரி – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் போலுப்பள்ளியில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகில் மத்திய நாற்றங்கால் பண்ணை அமைந்துள்ளது. இங்கு விவசாயிகளுக்கு தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்திற்கான பசுமை திட்டத்தின் மூலம் பல்வேறு உயர்தர மரக்கன்றுகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் உயர் ரக தரமான மரக்கன்றுகளான சந்தனம், தேக்கு, மலை வேம்பு, இலுப்பை, நாவல், மகாகனி, வேங்கை, ஈட்டி ஆகிய மரக்கன்றுகள் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் இலவசமாக வழங்கப்படுகிறது. தற்போது மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளது. மழை காலங்களை பயன்படுத்தி, விவசாய நிலங்களில், ஊடு பயிராகவோ அல்லது தொகுப்பாகவோ, வரப்பு நடவாகவோ நடவு செய்து பயன் பெறலாம்.

நிலத்தின் சிட்டா நகல், ஆதார் கார்டு, பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்று கொடுத்து, இலவசமாக மரக்கன்றுகளை பெற்று பயன்பெறலாம். மேலும் விவரம் அறிய, மரக்கன்றுகளை பெற வனச்சரக அலுவலர் 80720 00523, வனவர்கள் 98947 98996, 97870 76217 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு வனச்சரக அலுவலர் தெரிவித்துள்ளார்.

## வாணியம்பாடி மலைக்குன்றில் இருந்து குடியிருப்பு பகுதியில் உருண்டு விழுந்த ராட்சத பாறை

வாணியம்பாடி, ஜூலை 24

வாணியம்பாடியில் மலைக்குன்றில் இருந்து குடியிருப்பு பகுதியில் ராட்சத பாறை உருண்டு வந்து விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. இதேபோல் நேற்று முன்தினம் 4வது நாளாக மழை பெய்தது. இதன்காரணமாக வாணியம்பாடி, செட்டியப்பனூர், கிரிசமுத்திரம், வளையாம்பட்டு,அம்பலூர்,கொடையாஞ்சி, திகுவா பாளையம், திம்மாம்பேட்டை உள்ளிட்ட கிராமங்களில்இயல்பு வாழ்க்கை பாதித்தது.



நேதாஜி நகர் பகுதி மில்லத்நகரில்மலைக் குன்று உள்ளது. இதனருகே உள்ள குடியிருப்பு பகுதியில் ஏராளமானோர் வசிக்கின்றனர். இங்கு நேற்று முன்தினம் இரவு வரை மழைபெய்த நிலையில் குன்றின் மேல் இருந்த ராட்சத பாறை திடீரென சரிந்து குடியிருப்பு பகுதியில் உருண்டு வந்து விழுந்தது. அதிர்ஷ்டவசமாக குடியிருப்பு பகுதிகளுக்கு நடுவில் உள்ள பாதை வழியாக ராட்சத பாறை உருண்டு வந்ததால் குடியிருப்பு பகுதியில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.


விழுந்த வேகத்தில் குடியிருப்புகளின் மீது மோதியிருந்தால் வீடுகள் இடிந்திருக்கும்.

ஆனால் தெருபகுதியின் நடுவில் நின்றதால் மக்கள் அதிர்ஷ்டவசமாக தப்பினர்.

மேலும்அங்குயாரும் இல்லாததால் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

இதனால் பொதுமக்கள் நிம்மதியடைந்தனர். இதுகுறித்து தகவலறிந்த வாணியம்பாடி தாசில்தார் சுதாகர், நகராட்சி ஆணையாளர் ரகுராமன், வாணியம்பாடி திமுக நகர செயலாளர் சாரதிகுமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பார்வையிட்டு ராட்சத பாறையை ஜேசிபி மற்றும் இயந்திரங்கள் உதவியுடன் அப்புறப்படுத்தினர்.

## சென்னையில் போக்குவரத்து விதிமீறல் அபராதம் ரூ.450 கோடி நிலுவை



சென்னை, ஜூலை 24

சென்னையில் போக்குவரத்து விதிமீறல் அபராதத்தில் ரூ.450 கோடி இன்னும் வசூலிக்கப்படாமல் உள்ளது. சீட் பெல்ட் அணியாதது, ஹெல்மெட் இன்றி பயணம், ஒரே வாகனத்தில் 3 பேர் சென்றது, போன் பேசியதற்காக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## உதகை அருகே உள்ள பைக்காரா படகு இல்லம் தற்காலிகமாக மூடல்



உதகை, ஜூலை 24

உதகை அருகே உள்ள பைக்காரா படகு இல்லம் இன்றும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. பைக்காரா படகு இல்லம் செல்லும் சாலையில் *Fast tag* கட்டண மையம் அமைக்கும் பணி நடைபெறுகிறது. பைக்காரா படகு இல்லத்திற்கு வருவதை சுற்றுலா பயணிகள் தவிர்க்குமாறு வனத்துறை வேண்டுகோள் வைத்துள்ளனர்.

## வருமானத்துக்கு அதிகமாக அதிமுக மாஜி பெண் எம்எல்ஏ ரூ.9.79 கோடி சொத்து குவிப்பு: கணவர் உள்பட 4 பேர் மீது வழக்கு

பண்ருட்டி, ஜூலை 24

வருமானத்துக்கு அதிகமாக ரூ.9.79 கோடி சொத்து சேர்த்ததாக பண்ருட்டி அதிமுக மாஜி எம்எல்ஏ சத்யா பன்னீர்செல்வம், அவரது கணவர் உள்பட 4 பேர் மீது விஜிலென்ஸ் போலீசார் வழக்குபதிவு செய்துள்ளனர். கடலூர் மாவட்டம் பண்ருட்டி தொகுதி முன்னாள் அதிமுக எம்எல்ஏவும், தற்போதைய அதிமுக மாநில மகளிர்அணி துணைச்செயலாளருமான சத்யா பன்னீர்செல்வம் வீட்டில் கடந்த 18ம் தேதி விஜிலென்ஸ் போலீசார் அதிரடி சோதனை நடத்தினர்.



2016ம் ஆண்டு அதிமுக எம்எல்ஏவாக இருந்த போது வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாகவும், அவரது கணவர் பன்னீர்செல்வம் பண்ருட்டி நகரமன்ற தலைவராக இருந்தபோதும் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாகவும் எழுந்த குற்றசாட்டின் அடிப்படையில் இந்த சோதனை நடந்தது. லஞ்ச ஒழிப்புத் துறை டிஎஸ்பி சத்யராஜ் தலைமையிலான 15 பேர் கொண்ட குழுவினர் 17 மணி நேரம் இந்த சோதனையை மேற்கொண்டனர். இந்த சோதனையில் கணக்கில் காட்டப்படாத ஏராளமான சொத்து ஆவணங்களை போலீசார் கைப்பற்றி எடுத்துச் சென்றனர்.

இந்நிலையில் வருமானத்துக்கு அதிகமாக ரூ.9.79 கோடிசொத்து சேர்த்ததாக சத்யா பன்னீர்செல்வம் மற்றும் அவரது கணவர் பன்னீர்செல்வம் உள்பட 4 பேர் மீது விஜிலென்ஸ் போலீசார் வழக்குபதிவு செய்துள்ளனர். சத்யா பன்னீர்செல்வம் எம்எல்ஏவாக பதவியில் இருந்த 2016 2021ம் ஆண்டு காலக்கட்டத்தில் கூடுதலாக சொத்து சேர்த்திருப்பதாக எப்.ஐ.ஆரில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதனிடையே சத்யா பன்னீர்செல்வம் மீது லஞ்ச ஒழிப்புத்துறை மேலும் ஒரு வழக்குபதிவு செய்துள்ளதாக சமூக வலைதளத்தில் தகவல் பரவியது. இதுகுறித்து லஞ்ச ஒழிப்பு போலீஸ் டிஎஸ்பி சத்யராஜிடம் கேட்டபோது, இதுபோன்ற தகவலை யாரோ பரப்பி விடுகின்றனர். அதில் உண்மை இல்லை என்றார். அதே வேளையில் சத்யா பன்னீர்செல்வம் வீட்டிற்கு சோதனையிட வருவதற்கு முன்பு வழக்குபதிவு செய்யப்பட்ட தகவலை உறுதிபடுத்தினார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

24.7.2025

## 2026ல் தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும்: டிடிவி தினகரன் திட்டவட்டம்



சென்னை, ஜூலை 24

2026ல் தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும் என்று டிடிவி தினகரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அதிமுக தனிப்பெரும்பான்மை பெற்றாலும் கூட்டணி ஆட்சியே அமையும் என டிடிவி தினகரன் திட்டவட்டம். தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளும் ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெறும் என்றும் உறுதி அளித்துள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல்நிலை சீராக உள்ளது: அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி




சென்னை, ஜூலை 24

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் ஏற்பட்ட லேசான தலை சுற்றலை தொடர்ந்து அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் தொடர்ந்து மருத்துவர்கள் கண்காணிப்பில் இருந்து வருகிறார்.

மேலும் சில மருத்துவ பரிசோதனைகளும் எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாலும் அரசு பணிகளை தொடர்வதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை கிரீம்ஸ் சாலை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலினை, அமைச்சர் மா.சுப்பிரமணியன் சந்தித்தார். இதுகுறித்து செய்தியாளர்களிடம் கூறியதாவது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் உடல்நிலை சீராக உள்ளது. மேலும் முதல்வரின் உடல்நலம் குறித்து இன்று பிற்பகல் அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகம் சார்பில் அறிக்கை வெளியிடப்படவுள்ளது. மு.க.முத்து இறப்பின் போது நாள் முழுவதும் நின்று கொண்டே இருந்தார்.

தொடர்ச்சியாக ஒன்றரை கிலோ மீட்டர் நடை பயணம் மேற்கொண்டதால் சோர்வடைந்தார் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

## கொல்லி வயல் சாலையை சீரமைக்க கோரிக்கை



கூடலூர், ஜூலை 24

கூடலூர் கள்ளிக் கோட்டை சாலையில் பிரிந்து கூடலூர் நகராட்சிக்கு உட்பட்ட எம்ஜிஆர் நகர், கொல்லி வயல், ஆனை செத்த கொல்லி வழியாக கூடலூர் தேவர் சோலை சாலை முதல் மைல் பகுதியை இணைக்கும் சாலை உரிய பராமரிப்பு இன்றி பல இடங்களில் சேதமடைந்து காணப்படுகிறது.

இந்நிலையில், இந்த சாலையை ஏராளமான பொதுமக்கள், பழங்குடியின மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். ஆட்டோ, கார்கள் மற்றும் சிறிய ரக சரக்கு வாகனங்களும் இயக்கப்படுகின்றன. சாலை உரிய பராமரிப்பு இல்லாததால் பல இடங்களில் பள்ளங்கள் ஏற்பட்டு மழைநீர் தேங்கியுள்ளது.

இதனால்சாலைமேலும் சேதமடையும் நிலை உள்ளது. இந்த சாலையை முறையாக சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வெள்ளப்பெருக்கு காரணமாக சுருளி அருவியில் 5வது நாளாக குளிக்கத் தடை



வெள்ளப்பெருக்கு காரணமாக சுருளி அருவியில் 5வது நாளாக குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கன மழை காரணமாக சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

## வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் குறித்த சிறப்பு முகாம்



ஊட்டி, ஜூலை 24

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு குறித்து மாவட்ட அளவிலான முகாம் ஊட்டியில் உள்ள பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடந்தது.

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பயன்பாடுகள் அதிகரித்து வரும் நிலையில், அவற்றை சரிவர பராமரிப்பது தொடர்பாக வேளாண்மை பொறியியல் துறையின் மூலமாக மாவட்ட அளவிலான முகாம் ஊட்டியில் உள்ள பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடந்தது.

இம்முகாமிற்கு வேளாண் பொறியியல் துறையின் செயற்பொறியாளர் செந்தில்குமார் தலைமை வகித்தார். நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்தார்.

இம்முகாமில், 7 உற்பத்தி நிறுவனங்கள் பல்வேறு வகையானடிராக்டர், பவர்டில்லர், பவர்வீடர், தேயிலை அறுவடை இயந்திரம் போன்ற வேளாண் இயந்திரங்கள், மின் மோட்டார், புற்கள் வெட்டும் கருவிகள், சுழல் கலப்பை, மருந்து தெளிப்பான் மற்றும் இதர கருவிகள் மற்றும் சூரிய சக்கதி பம்செட் போன்ற கருவிகளை பராமரிக்கும் முறைகள் குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த 80க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டனர். இதில், கேத்தி சிஎஸ்ஐ பொறியியல் கல்லூரியை சேர்ந்த 45 மாணவர்களும், ஜோசப் ஐடிஐ கல்லூரியை சேர்ந்த 30 மாணவர்களும் கலந்துக் கொண்டு பயிற்சி பெற்றனர். மேலும், முகாமில், 10 பயனாளிகளுக்கு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, பவர் டில்லர் மற்றும் பவர் வீடர் ரூ.9.07 லட்சம் மானியத்தில் வழங்கினார்.

## இன்றைய ராசி பலன்கள் (24.7.2025)

**மேஷம்**: முயற்சியில் வெற்றி காண்பீர்கள். கடமை உணர்வும் செல்வாக்கும் உயரும். பரிகாரம்: சனீஸ்வரரை வழிபடுங்கள்.

**ரிஷபம்**: பண விஷயங்களில் சாதகமான நாள். எதிர்பாராத வருமானம் வந்து சேரும். பரிகாரம்: விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம் செய்யுங்கள்.

**மிதுனம்**: புதிய திட்டங்கள் உருவாகும். நிதி உதவி கிடைக்கும். பரிகாரம்: துர்கை தேவியை வழிபடுங்கள்.

**கடகம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். வீடு தொடர்பான சுபநிகழ்வு கூடும். பரிகாரம்:சந்திரனைதியானிக்கவும்.

**சிம்மம்**: சாதனைகள் பெறும் நாள். உயர்ந்த பதவிக்கு பரிந்துரை வரலாம். பரிகாரம்: சூரிய நமஸ்காரம் செய்யுங்கள்.

**கன்னி**: சிக்கல்கள் நீங்கும். தொழில் விரிவாக்கம் சாத்தியம். பரிகாரம்: விநாயகர் வழிபாடு சிறப்பளிக்கும்

**துலாம்**: புதிய சந்திப்புகள் உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும். பரிகாரம்: துர்க்கையை மனத்தில் பூஜிக்கவும்.

**விருச்சிகம்**: காரியங்களில் தாமதம் இருக்கலாம். பொறுமையாக செயல்படுங்கள். பரிகாரம்: ஹனுமான் சாலிசா பாராயணம் செய்யவும்.

**தனுசு**: பயணங்களில் லாபம். அரசியலில் செல்வாக்கு உயரும். பரிகாரம்: குரு பகவானை வழிபடுங்கள்.

**மகரம்**: நிலம் தொடர்பான விவகாரங்களில் வெற்றி காண்பீர்கள். பிள்ளைகள்நன்மை. பரிகாரம்: ஸ்ரீ மகாலட்சுமி பூஜை சிறந்தது.

**கும்பம்**: புதிய முயற்சி தொடங்கலாம். நண்பர்கள் உதவி கிடைக்கும். பரிகாரம்:சனிபீஜமந்திரம்ஜபிக்கவும்.

**மீனம்**: மன உறுதி தேவைப்படும் நாள். ஆலோசனைகள் கேட்டுச் செயல்படுங்கள்.பரிகாரம்:தட்டாத்தா தரிசனம் செல்லலாம்.



தமிழக நகர் புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கு சாமித்தோப்பு அய்யா வழி வைகுண்டர் வழி மகா குரு பால பிரஜாபதி அடிகளார் முன்னிலையில் கல்வியாளர் டாக்டர் ஜெய்லானி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் கழக கல்வியாளர் அணி செயலாளர் மேன்மை மிகு.டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்க ள் எழுதிய புத்தகத்தை கல்வி வளர்ச்சி நாளான காமராஜர் பிறந்த நாள் விழா வில் திருச்சியில் வழங்கினார்.அதன்பிறகு கல்வி கண் திறந்த காமராஜர் என்ற தலைப்பில் டாக்டர் ஜெய்லானி பேசினார்.

## ஆப்பிள் டிவியுடன் இணைந்த 'பிரேக்கிங் பேட்' எழுத்தாளர்..!




'பிரேக்கிங் பேட்' மற்றும் 'பெட்டர் கால் சால்' தொடர்களின் எழுத்தாளரான வின்ஸ் கில்லிகன் ஆப்பிள் டிவியுடன் இணைந்து ஒரு புதிய தொடரினை உருவாக்க உள்ளார்.

2008ம் ஆண்டு நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியான தொடர் பிரேக்கிங் பேட். இந்த தொடருக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். இதில் அன்னா கன், டீன் நோரிஸ், ஆர்ஜே மிட், பெட்சி பிராண்ட், ஜியான்கார்லோ எஸ்போசிட்டோ, ஜோனாதன் பேங்க்ஸ் மற்றும் பாப் ஓடென்கிர்க் ஆகியோரும் நடித்திருந்தனர். இந்ததொடரைவின்ஸ்கில்லிகன்எழுதிஇயக்கியிருந்தார்.

இந்த நிலையில், உலக புகழ் பெற 'பிரேக்கிங் பேட்' மற்றும் 'பெட்டர்கால்சால்' தொடர்களின் எழுத்தாளரான வின்ஸ் கில்லிகன் ஆப்பிள் டிவியுடன் இணைந்து ஒரு புதிய தொடரினை உருவாக்க உள்ளார்.

அதற்கான அறிவிப்பு வருகிற 25ம் தேதி வெளியாக உள்ளது. 'பெட்டெர் கால் சால்' தொடரில் கிம் வெக்ஸ்லர் கதாபாத்திரத்தில் நடித்த நடிகை ரியா சீஹார்ன், இந்த புதிய தொடரின் நாயகியாக இருப்பார் எனக் கூறப்படுகிறது.

## "வைப் இருக்கு பேபி"...கவனத்தை ஈர்க்கும் ''மிராய்'' படத்தின் முதல் பாடல் போஸ்டர்





''அனுமான்'' நடிகர் தேஜா சஜ்ஜாவின் புதிய திரைப்படமான மிராய், தெலுங்கு சினிமாவில் மிகவும் எதிர்பார்க்கப்படும் படங்களில் ஒன்றாகும். சில மாதங்களுக்கு முன்பு வெளியான இப்படத்தின் டீசர் இணையத்தில் கவனம் பெற்றது.

கார்த்திக் கட்டம்னேனி இயக்கத்தில் ரித்திகா நாயக் கதாநாயகியாக நடித்துள்ள இந்தப் படம், தற்போது மீண்டும் கவனத்தை ஈர்த்துள்ளது. அதன்படி, வருகிற 26ம்தேதி "வைப்இருக்குபேபி" என்றஇப்படத்தின் முதல் பாடல் பல்வேறு மொழிகளில் வெளியாக உள்ளது. இது தொடர்பாக படக்குழு வெளியிட்டுள்ள அறிவிப்பு போஸ்டர் வைரலாகி வருகிறது.

ஒத்திவைப்பு வதந்திகளுக்கு மத்தியில், படம் திட்டமிட்டபடி செப்டம்பர் 5ம் தேதி பல மொழிகளில் வெளியாகும் என்று குழு தெளிவுபடுத்தியுள்ளது.

## இந்தியன் 3 படப்பிடிப்பு பணி தொடங்குமா?




இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் நடிகர் கமல்ஹாசன் நடிப்பில் 28 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான 'இந்தியன்' திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இதனைத்தொடர்ந்து இந்த படத்தின் இரண்டாம் பாகம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் வெளியானது.

கமல்ஹாசன், சித்தார்த், ரகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர், சமுத்திரக்கனி, பாபி சிம்ஹா, டெல்லி கணேஷ், வெண்ணிலா கிஷோர் உள்ளிட்ட பலர் நடித்திருந்த இப்படம் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை.

'இந்தியன் 2' படத்திற்கு எதிர்மறையான விமர்சனங்கள் கிடைத்தாலும், 'இந்தியன் 3' படத்தின் டிரெய்லர் ரசிகர்களிடம் வரவேற்பைப் பெற்றது. எனவே இயக்குனர் ஷங்கர் இந்தியன் 3 படம் நிச்சயம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெறும் என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் இப்படத்தின் புதிய தகவல் ஒன்று வெளியாகி இருக்கிறது. அதாவது, 'இந்தியன் 3' படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்க இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதுகுறித்து ஷங்கர் தரப்பில் விசாரித்த போது, "இந்தியன் 3 படம் குறித்து பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது" என்று கூறியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

## ஜோஷ் இங்கிலிஸ் அதிரடி: வெஸ்ட் இண்டீஸை வீழ்த்திய ஆஸ்திரேலியா




ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீஸில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆடி வருகிறது. இதில் முதல் ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீஸ் வெற்றி பெற்று தொடரில் 10 என முன்னிலையில் இருந்தது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2வது போட்டி ஜமைக்காவில் நேற்று (இந்திய நேரப்படி இன்று) நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் 20 ஓவரில் 8 விக்கெட்டை இழந்து 172 ரன்கள் எடுத்தது. வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அதிகபட்சமாக பிரண்டன் கிங் 51 ரன் எடுத்தார். ஆஸ்திரேலியா தரப்பில் ஆடம் ஜாம்பா 3 விக்கெட் வீழ்த்தினார்.

தொடர்ந்து 173 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஆஸ்திரேலியா 15.2 ஓவரில் 2 விக்கெட்டை மட்டும் இழந்து 173 ரன் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஆஸ்திரேலியா தரப்பில் அதிரடியாக ஆடிய ஜோஷ் இங்கிலிஸ் 78 ரன் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 20 என ஆஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 3வது டி20 போட்டி வரும் 25ம் தேதி நடக்கிறது.

## சீன ஓபன் பேட்மிண்டன்: பிரனாய் 2வது சுற்றுக்கு முன்னேற்றம்

சீனஓபன்பேட்மிண்டன்போட்டி சீனாவின்சாங்சோநகரில் நடைபெற்று வருகிறது .இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் பிரனாய், ஜப்பானின் கோகி வடனாபேவை சந்தித்தார்.

இந்த போட்டியின் முதல் செட்டை 821 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த பிரனாய், ஆட்டத்தின் அடுத்த இரு செட்களில் அபாரமாக செயல்பட்டார். இதன் மூலம் அடுத்த இரு செட்களை 2116, 2321 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றி வெற்றி பெற்றார். இதன் மூலம் அவர் 2வது சுற்றுக்கு முன்னேறினார்.

## மகளிர் ஒருநாள் கிரிக்கெட்: இங்கிலாந்தை வீழ்த்தி தொடரை வென்ற இந்தியா




இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டி20 தொடரை 32 என்ற கணக்கில் கைப்பற்றிய இந்திய அணி, அடுத்ததாக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடுகிறது. இதன் முதலாவது ஆட்டத்தில் 4 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவும், 2வது ஆட்டத்தில் 8விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 11 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகளில் தொடர் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் 3வது மற்றும் கடைசி போட்டி செஸ்டர் லீ ஸ்டிரீட்டில் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த இந்தியா 50 ஓவரில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 318 ரன்கள் குவித்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஹர்மன்பிரீத் கவுர் 102 ரன்கள் எடுத்தார்.

தொடர்ந்து 319 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இங்கிலாந்து 49.5 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 305 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 13 ரன் வித்தியாசத்தில் இந்தியா திரில் வெற்றி பெற்றது. இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக நாட் ஸ்கிவர் பிரண்ட் 98 ரன் எடுத்தார்.

இந்தியா தரப்பில் கிராந்தி கவுட் 6 விக்கெட் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 21 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.